உ

ஆரம்பம் :

விரோதி ஸு ஆவணி மீ 26ஆம் உ (1889)

சைவ பரிபாலன சபை வெளியீடு

பிரதி விலை : ரூபா 50.00

# இந்து சாதனம்

(HINDU ORGAN)

ஹேவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 01ஆம் நாள்

புத்தகம் : 129 | 16-12-2017 | இதழ் : 05

## தில்லையில் கூத்தனுக்கு நல்லையில் பெருவிழா

### (நல்லூர் ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தான மார்கழி மஹோற்சவம்)

பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன்
தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணத்து நல்லூரில் கல்வளவு எனும் பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவாலயமே நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாத சுவாமி தேவஸ்தானம் எனும் நல்லூர் சிவன் ஆலயம் ஆகும்.

இவ்வாலயம் 1916.06.26 அன்று நல்லூர் பிரம்மஸ்ரீ. நா.வே. கார்த்திகேயக்குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டதாகும். கைலாசநாத சுவாமியும், கமலாம்பிகை அம்பாளும் சமமான சந்நிதானமாகவும் சிவபெருமானுக்கு வலப்புறம் அம்பிகை நித்ய கல்யாண தோற்றத்திலும் விளங்குவது சிறப்பம்சமாகும். இவ்வாலயத்தின் வரலாற்றினை "ஸ்ரீ கைலாசநாதர் புராணம்" எனும் தலபுராணம் சிறப்புற எடுத்தாளுகின்றது. ஆயிரத்து அறுநூறு விருத்தப் பாக்களில் பதினேழு சருக்கங்கள் கொண்ட இப்புராணம் வட்டுக்கோட்டை பிரம்மஸ்ரீ நா. சிவசுப்பிரமணிய சிவாச் சாரியாரால் இயற்றப்பட்டதாகும். இத்தலத்தில் தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெற்று வரும் அதேவேளை வெள்ளிக்கிழமை தோறும் சிவனுக்கு ஏக கலச ஸ்நபன அபிஷேகமும் அம்பாளுக்கு பாரம்பரிய முறைப்படி செவ்வாய், வெள்ளி இரு தினங்களிலும் ஸ்ரீ சக்ரபூஜையும் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

பூ பிரஸ்தாரம், கைலாச பிரஸ்தாரம், மேரு பிரஸ்தாரம் எனும் மூவகை ஸ்ரீ சக்ரங்களும் இவ்வாலயத்தில் காணப்படுகிறது. பிரதோஷ காலங்களில் மாலை சிவனுக்கு நவகலச ஸ்நபனகும்ப அபிஷேகமும் விசேட சோடச உபசார பூஜைகளுடன் உற்சவமும் நடைபெறும் அதேவேளை, அம்பாளுக்கு பௌர்ணமி தினங்களில் மாலை நவகலச ஸ்நபன கும்ப அபிஷேகமும் ஸ்ரீ சக்ர பூஜையும் நடைபெறும் மரபு தொன்றுதொட்டு காணப்படுகிறது.



படம் : ஐ. சிவசாந்தன்

HDW7